கழக ஆட்சியில் – காரைக்குடி புலவர் ஆ.பழநியின் நூல்களை நாட்டுடைமையாக்கிய

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டு விழா!

## முன்னாள் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் – மு.தென்னவன் – முன்னணியினர் பங்கேற்பு!

காரைக்குடி, ஜுலை.13-
கடந்த ஆண்டு திராவிட மாடல் ஆட்சியில், ஏப்.29இல் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாளையொட்டி, தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் "தமிழ் வளர்ச்சி நாள்" விழா தமிழகம் முழுவதும் ஒருவாரம் நடந்தது.

இந்த விழாவில் இறுதி நாளான 2025 மே -05ம் நாள் சென்னை கலைவாணர் அரங்கில் நடத்தப்பட்ட நிகழ்வில் "திராவிட மாடல்" முதலமைச்சர் பங்கேற்று, காரைக்குடி "பகுத்தறிவுப் பாவலர்" ஆ.பழநி எழுதிய படைப்பிலக்கிய 18 நூல்களையும் நாட்டுடைமை செய்து அரசாணையும், பரிவுத் தொகை காசோலையும் வழங்கினார்கள். இதனை புலவரின் மரபுரிமை வாரிசுகளான சுப.அழகுப் பாண்டியனும் அவரது பேரன்களும் பெற்றுக் கொண்டனர். அத்தொகையினை வங்கியில் முதலீடு செய்து "புலவர் ஆ.பழனி அறக்கட்டளையும் தொடங்கி பதிவு செய்தனர்."

**நன்றி - பாராட்டு விழா!**

புலவரின் நூல்களை நாட்டுடைமையாக்கிய "திராவிட மாடல்" முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், அதற்கு உறுதுணையாக இருந்த திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவிக்கும் விழா, சூலை 18 சனிக்கிழமை மாலை காரைக்குடியில் நடக்கின்றது.

இதில் மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன், தி.மு.க. இலக்கிய அணி நிர்வாகிகள், கவிச்சுடர் கவிதைப்பித்தன், மு.தென்னவன், தி.க.து. பொதுச் செயலர் பிரின்சு என்னாரெசு பெரியார் உட்பட பலரும் கலந்து கொள்கிறார்கள்.





மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சுதந்திரப் போராட்ட மாவீரர் அழகுமுத்துக்கோன் 269வது பிறந்தநாளையொட்டி வடக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்ட செயலாளர் பி.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார், இதில் மாவட்டப் பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், மாநில இலக்கிய அணி நேரு பாண்டியன், மாநில விவசாய அணி கணேசன், மாநில பொறியாளர் அணி கலை கார்திகேயன், முன்னாள் எம்.எல்.ஏ. தமிழரசன், கழக நிர்வாகிகள் சிறைச்செல்வன், மதிவாணன், ஜெயராமன், பாலராஜேந்திரன், மருதுபாண்டியன், ராஜகோடி, பாண்டியராஜன், மு.பால்பாண்டியன், ரகுபதி, சத்தியபிரகாஷ், ஜெயராமன், மனோகரன், வீரராகவன், உமாசிங்கத் தேவன், வக்கில் கார்த்திக், தக்காகுடி சரவணன், திருப்பாலை ராமமூர்த்தி, வீரக்குமார், செந்தில்குமரன், பாலமுருகன், பாபு, முருகேசன், செல்வகணபதி, முருகன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.

3085 ஏக்கர் நிலத்தின் பத்திரப்பதிவு தடையை நீக்கி ரூ.25 ஆயிரம் கோடி மதிப்புள்ள

# கோயில் நிலத்தை ஆக்கிரமிப்பாளர்களுக்கு தாரைவார்த்த த.வெ.க. அரசு!

## இந்து சமய அறநிலையத்துறை ஆணையில் அம்பலம்!

சென்னை. ஜுலை. 13-
பத்திரப்பதிவு தடை செய்யப்பட்ட 3085 ஏக்கர் நிலத்தின் தடையை நீக்கம் செய்ய இந்து சமய அறநிலையத்துறை உத்தரவிட்டுள்ளது. கடந்த தி.மு.க. ஆட்சியில் இந்து சமய அறநிலையத்துறை கோயில்களுக்குச் சொந்தமான இடங்களை பல ஆண்டுகளாக ஆக்கிரமித்து இருந்தவர்களிடம் இருந்து மீட்கும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. அதில் வரி கூட கட்டாமலும், வாடகை கட்டாமலும் வீடு, விவசாய நிலங்கள், வணிக வளாகங்களில் ஆக்கிரமிப்பாளர்கள் பல ஆண்டுகளாக வசித்து வந்தனர். பலர் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து பட்டாவும் வாங்கியுள்ளனர்.

இதனால் ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து ஏராளமான நிலங்கள் மீட்கப்பட்டன. குறிப்பாக 8107 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட நிலங்கள், கட்டிடங்களின் மதிப்பு மட்டும் ரூ.8436 கோடியாகும். இந்த இடங்கள் அனைத்தும் 1055 கோயில்களுக்குச் சொந்தமானவை. இந்தநிலையில், தற்போது ரூ.25 ஆயிரம் கோடி மதிப்புள்ள 3085 ஏக்கர் நிலங்கள், ஆக்கிரமிப்பாளர்களுக்கே வழங்கி தவெக அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கு பா.ஜ.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக இந்து சமய அறநிலையத்துறை வெளியிட்டுள்ள ஆணையில் கூறியுள்ள தாவது:

தமிழ்நாடு மைனர் இனாம் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் (30/1963) முன்பு திருக்கோயில் பெயரில் தாக்கலாகி பின்னர் இரயத்துவாரி பட்டாக்கள் தனிநபர்கள் பெயரில் வழங்கப்பட்ட நிலங்கள் அனைத்தும் இந்துசமய அறநிலையத்துறை உதவி ஆணையர் மற்றும் செயல் அலுவலர்களால் சார்பதிவாளர்களுக்கு முகவரியிட்ட கடிதத்தின் அடிப்படையில் தடையாணையில் பதிவு செய்யப்பட்டு பத்திரப்பதிவு தடை செய்யப்பட்டது தொடர்பாக கீழ்காணும் நிலங்களை தடை நீக்கம் செய்ய கரூர் மாவட்ட ஆட்சித்தலைவரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

புகழிமலை, பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலின் 3 கிராமங்களில் அமைந்துள்ள 214.29 ஏக்கர் நிலத்தில், 719 பட்டாதாரர்கள்; கரூர், கல்யாண பசுபதீஸ்வரர் சுவாமி கோயிலின் 4 கிராமங்களில் அமைந்துள்ள 204.52 ஏக்கர் நிலத்தில், 637 பட்டாதாரர்கள்; குப்புச்சிபாளையம் ரவீஸ்வரர் சுவாமி கோயிலின் 1 கிராமத்தில் அமைந்துள்ள 132.49 ஏக்கர் நிலத்தில், 334 பட்டாதாரர்கள்; வெஞ்சமாங்கூடலூர் விக்ரு தீஸ்வரர் கோயிலின் 7 கிராமங்களில் அமைந்துள்ள 2533.65 ஏக்கர் நிலத்தில், 1700 பட்டாதாரர்கள் என மொத்தமாக 4 கோயில்களின் 7 கிராமங்களில் உள்ள 3084.95 ஏக்கர் பரப்பளவில் 3390 பட்டா தாரர்கள் உள்ளனர்.

மேற்படி நிலங்களுக்கு தடை நீக்கம் செய்யலாம் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என இணை ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிலங்கள் தொடர்பாக வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையில் தடைநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட கோயில் செயல் அலுவலர்களை அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கோவில் நிலங்களை தனியாருக்கு எப்படி பட்டா வழங்க முடியும்?

## முதல்வர் விளக்கமளிக்க பா.ஜ.க. வலியுறுத்தல்!

கோவை, ஜுலை.12-
'கோவில் நிலங்களை எந்த அடிப்படையில் தனியாருக்கு பட்டா வழங்கினர் என்பது குறித்து முதல்வரும், அறநிலையத்துறை அமைச்சரும் விளக்கம் அளிக்க வேண்டும்," என்று தமிழக பா.ஜ, தலைவர் நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

கோவை பீளமேட்டில் உள்ள பா.ஜ, அலுவலகத்தில் நேற்று அவர் அளித்த பேட்டி வருமாறு:-

கரூர் மாவட்டத்தில், இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான நான்கு கோவில்களின் நிலத்தை, அவசர கதியில், அறநிலைய துறை இணை கமிஷனர் பரிந்துரையில் ஒரே நாளில், தனியாருக்கு பட்டா வழங்கி உள்ளனர்.

கோவில் நிலங்களுக்கு எந்த அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டது என்பது குறித்து முதல்வரும், அறநிலையத் துறை அமைச்சரும் விளக்கம் அளிக்க வேண்டும். கோவில் நிலங்களை தனியாருக்கு வழங்க அரசுக்கு எந்த தகுதியும் இல்லை. கோவில் சொத்துக்களை மீட்கும் போராட்டத்தை பா.ஜ, நடத்தும்.

கரூரில் உயிரிழந்த 41 பேரின் குடும்பத்தினருக்கு அரசுப்பணி வழங்கியதை எதிர்க்கவில்லை. பல துறைகளில், ஏற்கனவே பணிக்காக காத்திருக்கும் வாரிசுகள் மற்றும் போட்டி தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும்.

பணம் கொடுப்பது மட்டுமே லஞ்சம் அல்ல; வேண்டியவர்களுக்கு செய்யும் உதவியும் ஒரு வகையில் லஞ்சம்தான். கரூரில் நடந்த முதல்வர் நிகழ்ச்சியை அரசு பள்ளிகளில் ஒளிபரப்பியது தவறான முன்னுதாரணம்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவனின் அரசியல் நிலைப்பாடு தொடர்ந்து மாறி வருகிறது; தி.மு.க., கூட்டணியில் இருந்த போது ஒரு மாதிரியும், தற்போது வேறு மாதிரியும் பேசுகிறார்.

வரும் 2029 லோக்சபா தேர்தலில், பல கட்சிகள் இணைந்து பா.ஜ,வை எதிர்க்கத் தயாராவது தெளிவாக தெரிகிறது. பா.ஜ.வை பார்த்து அனைவரும் பயப்படுகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

காவிரி நதி நீர் விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை மீட்டெடுக்காமல்

# வரலாறு தெரியாமல் த.வெ.க. அமைச்சர் பேசுகிறார்!

## கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன் கண்டன அறிக்கை!



கிருஷ்ணகிரி, ஜுலை 13 -
காவிரி நதிநீர் விவகாரத்தில் தமிழகத்தின் வாழ்வாதார உரிமைகளை மீட்டெடுக்க முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் தற்போதைய திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் நடத்திய நீண்ட நெடிய அரசியல் சட்டப் போராட்டங்களின் வரலாறு தெரியாமல், அதிகார போதையில் த.வெ.க சட்ட அமைச்சர் நிர்மல் குமார் அவதூறு பரப்புவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்று மாநில அமைப்பு சாரா ஓட்டுநரை செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.செங்குட்டுவன் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார்.

**அருகதையுள்ளதா?**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள விரிவான அறிக்கையில், "காவிரி நதியின் வரலாறு எதுவுமே தெரியாமல் தான்தோன்றித்தனமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காவிரிப் பிரச்சினையில் தமிழகத்திற்கு துரோகம் செய்து விட்டார் என்று குற்றம்சாட்டும் சட்ட அமைச்சர் நிர்மல் குமார் அவர்களே, குற்றச் சாட்டை வைப்பதற்கு முன்பு ஒரு முறை உங்களை நீங்களே கண்ணாடியில் பார்த்து விட்டு குற்றம் சொல்வது சரியாக இருக்கும். முத்தமிழறிஞர் கலைஞர் மீது குற்றம் சுமத்து வதற்கு துளி அளவேனும் உங்களுக்கு அருகதை உள்ளதா என்று யோசிக்க வேண்டும்" எனச் சாடியுள்ளார்.

மேலும், 200 ஆண்டு கால காவிரி நதி போராட்ட வரலாற்றை விளக்கியுள்ள அவர், கடந்த 1807ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்த சென்னை ராஜதானிக்கும் மன்னராட்சியின் கீழ் இருந்த மைசூர் அரசிற்கும் இடையே காவிரி நதி பிரச்சினை குறித்த கடிதங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அப்போது மைசூர் அரசின் திவான் பூர்ணையா தமிழ்நாட்டின் கடிதங்களைப் பொருட்படுத்தாத நிலையில், 1831ல் மைசூர் அரசை ஆங்கிலேயர்கள் தங்கள் பொறுப்பில் எடுத்துக்கொண்ட போதிலும் அமைதி காத்தனர். பின்னர், 1856ல் கர்நாடகத்தில் பொது பணித்துறை என்ற அமைப்பை ஏற்படுத்தி, பேச்சுவார்த்தைகளை மெல்ல நகர்த்தினர்.

**1892இல் இரு மாநிலங்களுக்கிடையே முதல் ஒப்பந்தம்!**

அதன் தொடர்ச்சியாக, 1872ம் ஆண்டு இரு மாநில அதிகாரிகளும் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்து பேசித் தீர்க்க முடிவெடுத்தனர். 1890ம் ஆண்டு சென்னை மாகாணம் சார்பில் ஹெச். இ.ஸ்டோக்ஸ், நீர்ப்பாசனத் துறை பொறியாளர் ஜி.டி.வால்ஸ் மற்றும் மைசூர் சமஸ்தானம் சார்பில் ஆலிவர் செயின்ட் ஜான், கே.ஷேஷாத்திரி ஐய்யர், கர்னல் சி.போவன் ஆகியோர் கூடி உதகமண்டலத்தில் முதற்கட்ட பேச்சுவார்த்தை நடத்தினர். அதன் அடிப்படையில் 1892ல் இரு மாநிலங்களுக்கும் இடையே முதல் ஒப்பந்தம் ஏற்பட்டு, தமிழ்நாட்டின் 13.45 லட்சம் ஏக்கர் சாகுபடிக்கு 366.9 டி.எம்.சி தண்ணீரும், மைசூரின் 1.11 லட்சம் ஏக்கருக்கு 27.2 டி.எம்.சி தண்ணீரும் எடுத்துக்கொள்வதென உடன்பாடு எட்டப்பட்டது.

தொடர்ந்து, 1900ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு கடலில் வீணாகக் கலக்கும் தண்ணீரைச் சேமிக்க, 1910ல் காவிரியின் குறுக்கே தமிழகத்தில் மேட்டூர் அணையும், மைசூரில் கண்ணம்பாடி அணையும் கட்ட முடிவு செய்யப்பட்டு மத்திய ஆங்கிலேய ஆட்சியாளர்களின் கவனத்திற்கு அனுப்பப்பட்டது. இதன் விளைவாக 1924ல் புதிய ஒப்பந்தம் 50 ஆண்டு காலத்திற்குப் போடப்பட்டு, மீண்டும் 1974ல் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற வகையில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இருப்பினும், 1934 முதல் 1972 வரை சுமார் 36 ஆண்டு காலகட்டத்தில் தமிழ்நாட்டிற்குரிய தண்ணீர்ப் பங்கை கர்நாடகா வழங்கவே இல்லை என்றும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது காவிரி ஒப்பந்தங்களை மீறி கர்நாடக அரசு தமிழகத்திற்குத் துரோகமே இழைத்து வந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காவிரி ஆறு குடகு தலைகாவிரியிலிருந்து வங்கக்கடல் வரை 800 கிலோ மீட்டர் பயணிக்கிறது. இதில் கர்நாடகத்தில் 320 கி.மீ, தமிழ்நாட்டில் 416 கி.மீ, எல்லைப் பகுதியில் 64 கி.மீ பாயும் இந்த நதிநீர், தமிழகத்தில் 19 மாவட்ட மக்களுக்கு குடிநீராகவும், 10 மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் விளங்கி வருகிறது. இந்த உரிமையை மீட்க கலைஞர் மற்றும் மு.க.ஸ்டாலின் ஆகியோர் நடத்திய போராட்டங்களை அவர் பட்டியலிட்டுள்ளார்.

**1969 இல் காவிரி நடுவர் மன்றம் அமைக்க கோரிக்கை!**

கடந்த 1967ல் பேரறிஞர் அண்ணா அமைச்சரவையில் கலைஞர் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தபோதே இதற்கான பணிகள் தொடங்கின. 1969லேயே திமுக சார்பில் காவிரி நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டதுடன், சட்டமன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியவர் கலைஞர் ஆவார். சலிக்காமல் 35க்கும் மேற்பட்ட முறை கர்நாடகத்தோடு பேசியவர். 1990 ஏப்ரல் 24 அன்று தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி, அன்றைய பிரதமர் வி.பி.சிங்கிடம் வாதாடி "காவிரி நடுவர் மன்றம்" அமைத்துத் தந்தவரும் கலைஞர்தான். நடுவர் மன்றத்திற்கு இடைக்காலத் தீர்ப்பு வழங்க அதிகாரமில்லை என நடுவர் மன்றம் மறுத்தபோது, உச்ச நீதிமன்றம் சென்று இடைக்கால உத்தரவு வழங்கச் செய்து, அதன் மூலம் தமிழகத்திற்கு 205 டி.எம்.சி தண்ணீர் கிடைக்கப் பெற்றுத் தந்தார். தொடர்ந்து 2006ல் கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின் நடுவர் மன்ற விசாரணையை வேகப்படுத்தி, 2007 பிப்ரவரி 5 அன்று 192 டி.எம்.சி தண்ணீர் தமிழகத்திற்குப் பெற்றுத் தந்து அதனை மத்திய அரசின் அரசிதழிலும் வெளியிடச் செய்தார் என்று தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. அரசின் துரோகங்களைச் சாடியுள்ள டி.செங்குட்டுவன், கடந்த 1992ல் காவிரி விவகாரம் தொடர்பாக மத்திய அரசு எழுதிய கடிதத்திற்கு 14.04.1993 வரை பதிலளிக்காமல் அன்றைய அ.தி.மு.க. அரசு குரட்டை விட்டுத் தூங்கியதாகக் கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், நடுவர் மன்றத் தீர்ப்பை "பல்லில்லாத ஆணை" என ஏளனம் செய்து நதிநீர் ஆணையக் கூட்டங்களை அ.தி.மு.க. அரசு புறக்கணித்ததாகவும், தமிழகக் காவிரிப் படுகையில் 10 டி.எம்.சி நிலத்தடி நீர் இருப்பதாக நீதி மன்றத்தில் அதிமுக அரசு தவறான புள்ளி விவரத்தைச் சமர்ப்பித்த காரணத்தால்தான், உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பில் தமிழகத்தின் பங்கு 177.25 டி.எம்.சி ஆகக் குறைந்து போக அதிமுக அரசே முக்கியக் காரணம் என்றும் அவர் விளக்கியுள்ளார்.

**உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு!**

அதேபோல், தற்போதைய திமுக தலைவர் மு.க.ஸ்டாலினின் களப் போராட்டங்களைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பு வந்தவுடன் காவிரி நதிநீர் மேலாண்மை வாரியம் அமைக்க மத்திய மோடி அரசு மறுத்தபோது, மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சியிலிருந்து கடலூர் வரை 19 மாவட்ட விவசாயிகளைத் திரட்டி பிரம்மாண்ட உரிமை மீட்பு நடைபயணம் மேற்கொண்டார் என்று கூறியுள்ளார்.

மேலும், பிரதமர் மோடி சென்னை வந்தபோது ஒட்டுமொத்த தமிழக மக்களின் எதிர்ப்பைக் காட்டும் விதமாக கறுப்புக் கொடி ஏந்தி "Go Back Modi" போராட்டம் நடத்தி, ஒன்றிய அரசைப் பணிய வைத்து காவிரி மேலாண்மை வாரியம் அமையக் காரணமாக மு.க.ஸ்டாலின் இருந்தார் என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, திருவாரூர் மண்ணில் பிறந்த கலைஞர் காவிரிக்காக எந்த அளவிற்குப் பாடுபட்டார், சட்டப் போராட்டங்களை நடத்தினார் என்பதை இந்த வரலாற்றுத் தரவுகள் மூலமாக அறியலாம். இப்படிப்பட்ட காவிரி வரலாறுகள் எதுவுமே தெரியாமல், எடுத்தேன் கவிழ்ந்தேன் பாணியில் கலைஞர் மீது துரோகக் குற்றச்சாட்டு சுமத்துவதை த.வெ.க அமைச்சர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். காவிரி வரலாறு அறவே தெரியாமல்முத்தமிழறிஞர் கலைஞர் மீது குற்றம் சுமத்தி அறிக்கை விட்ட தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் அவர்களை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இவ்வாறு கிருஷ்ணகிரி காவிரி நதியின் கரையோர மாவட்ட மண்ணின் மைந்தனான மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் முன்னாள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.செங்குட்டுவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் தொடர் மின்வெட்டு!

## பள்ளி மாணவர்கள் மரத்தடியில் அமர்ந்து படிக்கும் அவலம்!

காஞ்சிபுரம், ஜுலை 13 –
காஞ்சிபுரம் முழுவதும் தொடர் மின்தடை ஏற்பட்டதால் அரசுப் பள்ளி மாணவ, மாணவிகள் மரத்தடியில் அமர்ந்து படிக்கும் அவலநிலைக்கு தள்ளப்பட்டு கடும் அவதிக்குள்ளாகினர். மேலும் இரவு முழுவதும் பல்வேறு இடங்களில் மின் தடை ஏற்பட்டதால் வீடுகள் இருளில் மூழ்கின, பொதுமக்கள் வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

அண்மை நாட்களாகவே தமிழகம் முழுவதும் பகலில் மட்டுமல்லாது, இரவு நேர மின்வெட்டு என்பதும் தலைவிரித்தாடி வருகிறது. அதிலும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாநகர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் இரவு நேரங்களில் மின்வெட்டு என்பது கடந்த ஒரு மாத காலமாகவே இருந்து வருகிறது. அந்தவகையில் நேற்று முன்தினம் இரவு காஞ்சிபுரம் மாநகரின் பல்வேறு பகுதிகளில் மின்வெட்டு ஏற்பட்டு பொதுமக்கள் கடும் அவதிகளுக்கு ஆளாகி மாநகரே இருளில் மூழ்கியது.

அதிலும் குறிப்பாக பெரிய காஞ்சிபுரம், பிள்ளையார்பாளையம், பல்லவர்மேடு, தாயார் குளம், ஹசிங் போர்டு, ஏகாம்பரநாதர் கோயில் சன்னதி தெரு, பாண்டவ பெருமாள் கோவில் சன்னதி தெரு, ஒபி குளம் தெரு, மாண்டுகணீஸ்வரர் கோவில் தெரு உள்ளிட்ட பகுதிகளில் மின்சாரமின்றி பொதுமக்கள் தங்களின் வீட்டின் வாயிலில் அமர்ந்தும், பலர் நீண்ட நேரம் ஏற்பட்ட மின்வெட்டு காரணமாக சாலையோரத்திலும் 2 மணி நேரத்திற்கும் மேலாக படுத்து உறங்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

மேலும் மின்வெட்டு காரணமாக குழந்தை உள்ள வீட்டினர்கள் வீட்டின் வெளியில் தங்களது குழந்தை குட்டிக ளோடு தெருக்களில் அமர்ந்தவாறும், மின்சாரம் எப்போது வரும் என்ற ஏக்கத்தோடும் காத்திருந்து பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்த தொடர் மின்தடையால் புதிய ஆட்சி தற்போது பின் நோக்கி தள்ளப்பட்டதாக வேதனை தெரிவித்தனர்.

மேலும், தமிழக முதல்வர் நேரடி கண்காணிப்பில் மின்வெட்டு பிரச்னையை கையில் எடுத்து உடனடி நடவடிக்கை எடுத்திட வழிவகுக்க வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைத்தனர். காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையம் பகுதியில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நெசவாளர்கள் வாழும் பகுதியாகும்.

பிள்ளையார்பாளையம் பகுதி 50க்கும் மேற்பட்ட நெசவாளர்கள் குடும்ப ங்கள் வாழும் பகுதியாகும். இப்பகுதிகளில் அரசு தொடக்கப் பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகள் இயங்கி வருகின்றன. மேலும் ஒரு தனியார் பள்ளியும் இயங்குகிறது.

இந்தநிலையில், நேற்று பிள்ளையார்பாளையம் பகுதியில் மின் தடை என்று தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி மின்சாரம் தடை செய்யப்பட்ட நிலையில் அரசுப்பள்ளிகளில் உள்ள மாணவ மாணவர்கள் அனைவரும் பள்ளிகளுக்கு வெளியில் அமர்ந்தும், மரத்தடியில் அமர்ந்தும் பாடம் படித்து கொண்டிருந்தனர்.

இதனால் மாணவர்கள் கடும் அவதிக்கு ஆளாகினர். எனவே, மாணவ மாணவிகளின் நலன் கருதி தமிழ்நாடு மின்சார வாரியமும், தவெக அரசும் முறையாக தடையில்லாத மின்சாரம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று பெற்றோர்கள், மாணவ மாணவிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்குப் பகுதி 30 அ வட்டக் கழகத்தின் மூத்த முன்னோடி கழக உடன்பிறப்பு ஆர்.நாராயணன் வயது 82 அவர்கள் மறைவுற்றார். அன்னாரின் உடலுக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.சுதர்சனம் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால், வட்ட செயலாளர்கள் டி.சுந்தரம், புத்தகரம் இ. ஏழுமலை, எம்.சரவணன், குட்டி மோகன், துரை, ஸ்ரீராமு, கே. லட்சுமி காந்தன், ஜி.பார்த்தசாரதி, எஸ்.என்.கோதண்டன், இராமன், எஸ்.பி.கண்ணன், அபி, ரகுமான், சக்கரபாணி, வெங்கட்ராமன், கருணாநிதி, என்.ராஜு, காஞ்சி சண்முகம், கே.நரேந்திரன், ஆட்டோ ராதா, உமா மகேஸ்வரி மற்றும் மலர் கலந்து கொண்டனர்.